**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**Case No. MCOP.33/2018**

**Deposition of P.W.1**

Name :
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 08.12.2023**

**முதல் விசாரணை–**

நான் இம்மனுவில் 1வது மனுதாரர். இம்மனு சம்மந்தமாக எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. மனு விபத்து சம்மந்தமாக மார்த்தாண்டம் காவல் நிலையத்தின் குற்ற எண்.320/2018 என பதிவு செய்யப்பட்ட வழக்கில் உள்ள முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், மனு விபத்தில் சம்மந்தப்பட்ட TN 72 BX 9469 என்ற வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, மனு விபத்தில் சம்மந்தப்பட்ட TN 75 K 0516 என்ற வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை, எனது கணவர் விஜயராஜின் பிரேத பரிசோதனை அறிக்கை ஆகியவற்றின் நீதிமன்ற சான்றிட்ட நகல்கள் அவை முறையே ம.சா.ஆ.1 முதல் 7. எனது கணவரின் இறப்பு

சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.8. எனது கணவரின் வாரிசு சான்றிதழ் இணைய வழி நகல் ம.சா.ஆ.9. எனது ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் அசல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசல் எனக்கு தேவைப்படுவதால் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.10 மற்றும் 11 ஆகும். மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.